பொதுச்சேவைத்துறை ஆணையத்தின் அகப்பக்கத்தில் எழுப்பப்படும் கேள்விகள் பதிவின் அணுகுமுறை

1. அரசாங்கத்துறை சார்ந்த வேலைக்கு எவ்வாறு விண்ணப்பம் செய்வது?

மத்தியப் பொதுச்சேவைத்துறையில் சேர இணையத்தின் ஊடாக மலேசியப் பொதுச்சேவைத்துறை ஆணையத்தின் அகப்பக்கத்தில் www.spa.gov.my பொதுச்சேவைத்துறை வேலை விண்ணப்ப பாரத்தைப் (SPA8i) பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்

2. வேலை விண்ணப்ப பாரத்தைப் (SPA8i) பூர்த்தி செய்வதற்குரிய பதிவு அடையாள எண்ணை Identity Number (ID) எவ்வாறு பெறுவது?

புதிய பதிவு கணக்கைத் திறப்பதன் மூலம் விண்ணப்பதாரர் தங்களின் பதிவு அடையாள எண்ணைப் பெறலாம். மேலும் முகப்பில் உள்ள புதிய பதிவு கணக்கைத் திறக்க உதவும் (Borang Pendaftaran Pekerjaan di Sektor Awam (SPA8i)) வழிகாட்டியையும் மேற்கோளாகக் கொள்ளலாம்.

3. எனது விண்ணப்ப மனுவை நான் எவ்வாறு புதுப்பித்துக் கொள்வது?

பதிவை வெற்றிகரமாக முடித்து பதிவு அடையாள எண்ணைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களும் மற்றும் அரசாங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களும் / நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்களும் (PSL) தங்களின் விண்ணப்ப பாரத்தில் உள்ள தகவல்களை எப்போது வேண்டுமாயினும் புதுப்பித்துக் கொள்ளலாம். இவற்றைப் புதுப்பிப்பதற்கு நீங்கள் பொதுச்சேவைத் துறை ஆணையத்தை நாட வேண்டியதில்லை.

4. எத்தகைய வேலை எனது கல்வித்தகுதிக்கு மிகவும் ஏற்றது?
விண்ணப்பம் செய்யும் வேலை உங்களுக்கு ஏற்றதா என்பது குறித்த தகவல்களை, வேலை சம்பந்தப்பட்ட தகவல்கள் (வேலையைப் பற்றிய விளக்கங்கள் / அடிப்படை ஊதியம்) எனும் பகுதியிலிருந்து பெறலாம். பட்டப்படிப்பை (Degree) முடித்த விண்ணப்பதாரர்கள் டிப்ளோமா கல்வித்தகுதியைக் கோரும் வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். இருந்த போதிலும் ஒரு தகுதிக் கீழ் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

5. எப்போது காலியான வேலைக்குரிய விளம்பரங்கள் வெளியிடப்படும்?
கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து பொதுச்சேவைத் துறை ஆணையம்தனது காலியான வேலைக்குரிய விளம்பரங்களை நாளிதழ்களில், இதற்குமுன் வெளியிட்டது போல் தற்போது வெளியிடுவது இல்லை. இருப்பினும் காலியான வேலைக்குரிய விளம்பரங்கள் பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் அகப்பக்கத்தில் எல்லா வேளைகளிலும் வெளியிடப்படுகிறது. ஆகவே, விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

தகவல்கள் மற்றும் அதன் சார்பான பிற விடயங்களையும் சரிபார்ப்பதோடு தங்களின் விருப்பமான மற்றும் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். வருட முழுவதும் வேலைக்கான விண்ணப்பத்தைச் செய்யலாம். அதைத் தவிர்த்து, சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான பொருத்தம் மற்றும் தேவையின் அடிப்படையில் பொதுச்சேவைத் துறை ஆணையம் எப்போது வேண்டுமானாலும் வேலைக்கான விளம்பரங்களை வெளியிடும்.

6. நான் பொதுச்சேவைத் துறை ஆணையத்தில் வேலைக்கு விண்ணப்பிக்க எனது அடிப்படை சுய தகவல்கள் அடங்கிய கோப்புகளை (resume) அனுப்ப வேண்டுமா?

இல்லை. விண்ணப்ப பாரத்திற்குத் தேவையான தகவல்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் பூர்த்தி செய்தாலே போதும். இருப்பினும், மேற்குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய படிவங்களும் தேவையான பிற படிவங்களும் நேர்காணலின் போது உடன் கொண்டு வரப்பட வேண்டும்.

7. என்னுடைய பதிவை நான் ஏன் புதுப்பிக்க வேண்டும்?

ஒரு வருட காலக்கட்டத்திற்குள் விண்ணப்பதாரர்கள் சோதனை அல்லது நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாவிடினும், அவர்கள் தங்களது அடையாள எண்ணைக் (ID) கொண்டு தங்களின் பதிவைப் புதுப்பிக்க வேண்டும். இதன் மூலம், பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் தகவல் வங்கி உண்மையிலேயே நாட்டமுள்ள விண்ணப்பதாரர்களின் தகவல்களை சேமிக்க முடியும். இதன் வழி, விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பம் ஒரு வருடத்திற்குப் மேல் காலாவதியாகாமல் இருப்பதை உறுதி செய்வதோடு பொதுச்சேவைத் துறை ஆணையம் தங்களின் விண்ணப்பங்களை நேர்முகத் தேர்வுக்காக பரிசீலனை செய்யவும் இயலும். நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்களும், தற்சமயம் அரசாங்கத் துறையில் பணியாற்றுபவர்களும் பொதுச்சேவைத் துறையின் வேலை விண்ணப்பப் பகுதியில் (SPA8i) அடையாள எண்ணை (ID) முன்னதாகப் பெற்றுத் தங்களின் பதிவை சுயமாகப் புதுப்பிக்க வேண்டும்.

8. எல்லா உயர்க்கல்விக்கூடங்களும் அங்கீகாரம் பெற்றுள்ளனவா?

இல்லை. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்க்கல்விக்கூடங்கள் குறிப்பாக தனியார் உயர்க்கல்விக்கூடங்கள் சிலவற்றுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே, பொதுச்சேவைத் துறையில் பணியாற்ற விரும்புவோர் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உயர்க்கல்விக்கூடங்கள் வழங்கும் கல்வியினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உயர்க்கல்விக்கூடங்கள் மற்றும் அவை வழங்கும் கல்வி குறித்த விவரங்களை பின்வரும் அகப்பக்கத்தின் வழி அறியலாம். http://www2.mqa.gov.my/mqr/.

9. குறைந்த நுழைவுத் தகுதியைக் கோரும் வேலைகளுக்கு விண்ணப்பம் செய்யலாமா?

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

முடியும். இருந்த போதிலும் ஒரு தகுதிக் கீழ் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. உதாரணமாக, டிப்ளோமா/எஸ்.டி.பி.எம்/மெட்ரிக்குலேசன் கல்வித் தகுதியைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் எஸ்.பி.எம் கல்வித் தகுதியைக் கோரும் வேலைக்கு விண்ணப்பிக்கலாம். இளங்கலைப் பட்டப்படிப்பைத் தேர்ச்சியுடன் முடித்த ஒருவர் டிப்ளோமா கல்வித்தகுதியைக் கோரும் வேலைக்கும் விண்ணப்பிக்கலாம்.

10. அரசாங்க வேலை மனுவை (Surat Tawaran) நான் நிராகரித்தால் என்ன நிகழும்? விண்ணப்பதாரர் வேலைக்கான மனுவை நிராகரிக்கும் அல்லது வேலையில் சேர தவறும் பட்சத்தில், எந்தவொரு நடவடிக்கை எடுக்கப் பட மாட்டாது.

11. எந்தத் தரப்பினருக்குச் சிறப்புப் பரிசீலனை அடிப்படையில் முன்னுரிமைக் கொடுக்கப்படும்?
உடல் ஊனமுற்றோர், பூர்வீகக் குடியினர், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வறுமை ஒழிப்புத் திட்டதின் பங்கேற்பாளர்/ மக்கள் நலத் திட்டம் மற்றும் அரசாங்க உதவி பெறுபவர்கள் அனைவரும் சிறப்பு தணிக்கையின் வழி பரிசீலிக்கப்படுவார்கள். விளம்பரம் அல்லது சேவைத் திட்டம் நிர்ணயித்திருக்கும் குறைந்த நுழைவுத் தேர்வின் அடிப்படையில் இவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இருப்பினும், நேர்முகத் தேர்வுக்கு வரும்போது இவர்கள் தங்களின் நிலையினை ஊர்ஜிதப்படுத்தும் சான்றிதழ்களையும் உடன் கொண்டு வர வேண்டும்.

12. தற்காலிக வேலை நியமனம் பெற்றுள்ள அதிகாரிகளுக்குக் கிடைக்கும் சிறப்புச் சலுகை யாது?

தற்காலிக வேலை நியமனம் பெற்றுள்ள அதிகாரிகளுக்கு நேரடி நியமனம் பெறுபவர்களுக்கு நிர்ணயிக்கப்படும் தணிக்கையை விட குறைந்த தணிக்கை அடிப்படையில் பரிசீலிக்கப்படுவார்கள். இருப்பினும் நேரடி நியமனம் பெறுபவர்களுக்கு நிர்ணயிக்கப்படும் விதிமுறை மற்றும் வழிமுறைகளுக்கு ஏற்ப இவர்களது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும். இதன்வழி, பணியிட வேலைகள் காலியாக இருப்பினும் இவர்கள் நேரடியாக வேலைக்கு நியமனம் செய்யப்பட மாட்டார்கள்.

13. அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெறுபவர்களுக்கு ஏதேனும் சிறப்புச் சலுகைகள் உள்ளனவா?

அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெறுபவர்களுக்கு எந்தவொரு சிறப்புச் சலுகையும் வழங்கப்பட மாட்டாது. மெரிட் அடிப்படையில் மற்ற விண்ணப்பதாரர்களுக்கு விதிக்கப்படும் வழிமுறைகளே இவர்களுக்கான பணித் தேர்வின் போதும் பயன்படுத்தப்படும்.

14. பொதுச்சேவைத் துறையில் இணைவதால் கிட்டும் நன்மைகள் யாவை?

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

பொதுச்சேவைத் துறையில் இணைந்த பிறகு பல நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன. அவை, வீட்டு உதவித் தொகை, வாழ்வாதார உதவித் தொகை Cost of Living Allowance (COLA), பொதுச்சேவைத் துறை வழங்கும் நிரந்தரமான தொகை, ஆண்டுதோறும் சம்பள உயர்வு, வாகனம் வாங்குவதற்குரிய கடனுதவி, தகுதி அடிப்படையில் ஆண்டு விடுமுறை, பிரசவ கால விடுமுறை மற்றும் வீடு வாங்குவதற்குரிய கடனுதவி ஆகியனவாகும்.

15. அரசு உயர்க்கல்விக்கூட மாணவர்களுக்கும் தனியார் உயர்க்கல்விக்கூட மாணவர்களுக்கும் இடையே பாகுபாடு பார்க்கப்படுகின்றதா? நேர்மையாகவும் நியாயமாகவும் நிர்ணயிக்கப்பட்ட தணிக்கை மற்றும் மெரிட் அடிப்படையிலேயே அரசு உயர்க்கல்விக்கூட மாணவர்களும் தனியார் உயர்க்கல்விக்கூட மாணவர்களும் வேலைக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். அதனையடுத்து, தணிக்கை வழி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வின் போது வெளிப்படுத்தும் திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

16. டிப்ளோமா கல்வித் தகுதியை உடைய நான் எஸ்.பி.எம் கல்வித் தகுதியைக் கோரும் வேலைக்கு விண்ணப்பிக்கலாமா?

டிப்ளோமா கல்வித் தகுதியை உடைய விண்ணப்பதாரர் எஸ்.பி.எம் கல்வித் தகுதியைக் கோரும் வேலைக்கு விண்ணப்பிக்க இயலும். அதேபோல் பட்டப்படிப்பை முடித்த விண்ணப்பதாரர் டிப்ளோமா கல்வித் தகுதியைக் கொண்டிருக்கும் பட்சத்தில் டிப்ளோமா கல்வித் தகுதியைக் கோரும் விண்ணப்பிக்கலாம்.

17. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரராகவோ அல்லது பொதுச்சேவைத்துறை ஆணையம் நடத்திய தேர்வில் தேர்ச்சியடைந்தவராகவோ இருக்கும் பட்சத்தில் நான் எனது விண்ணப்ப மனுவை புதுப்பிக்க வேண்டுமா? ஒருவேளை நான் அதனை புதுப்பிக்கும் பட்சத்தில், நான் சோதனைக்கு வந்ததையும் அதில் தேர்ச்சிப் பெற்றதையும் பாதிக்குமா?
புதுப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரரின் மனு காலாவதியாகும் பட்சத்தில் விண்ணப்பதாரர் அதனை புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு புதுப்பிக்கப்படும் மனு சோதனை முடிவுகளையோ அல்லது பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தையோ பாதிக்காது. மேலும், புதுப்பிக்கப்படும். பாரத்தில் தகவல்கள் மட்டுமே மாற்றப்படும்.

18. நாம் விண்ணப்பித்த வேலைகளின் தரவரிசையை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும் வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமா?
நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் வேலைகள் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யும் போது குறிப்பிட்ட தரவரிசையின்படி அழைக்கப்படுவதில்லை. அமைச்சு மற்றும் துறைகளில் வேலைக்கான காலி இடங்கள் இருக்கும்போது நேர்முகத் தேர்வுக்கான செயல்முறைகள் நடைபெறும். அவ்வேளை விண்ணப்பதாரர் காலியாக இருக்கும் வேலைக்கு தனது விண்ணப்ப மனுவில் மேற்குறிப்பிட்ட வேலைக்கும் விண்ணப்பித்திருந்தால், அவர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்.

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

நேர்முகத் தேர்வின் அணுகுமுறை

1. பொதுச்சேவைத் துறை ஆணையத்தில் நான் என்னைப் பதிவு செய்துள்ளேன். நான் எப்போது நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவேன்?

   பொதுச்சேவைத் துறையில் பதிவு செய்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் நேர்முகத் தேர்வுக்குப் பரிசீலிக்கப்படுவது கீழ்க்கண்ட காரணங்களைப் பொறுத்து அமையும் :-

   அ. விண்ணப்பிக்கப்படும் வேலை காலியாக உள்ளது;

   ஆ. விண்ணப்பித்த வேலைக்குரிய தேவைகளைக் கொண்டிருத்தல்;மற்றும்

   டூ. நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைத் தணிக்கை மற்றும் மெரிட் தகுதியில் தேறியிருக்க வேண்டும்.

   ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தங்களின் பதிவைப் பொதுசேவைத் துறை. ஆணையத்தின் அகப்பக்கத்தில் உள்ள தற்போதைய பதிவின் நிலவரத்தைக் காட்டும் தளத்தில் சரிப்பார்த்துக் கொள்ளலாம். தற்போதைய பதிவின் நிலவரங்கள் அனைத்தும் ஒரு நாளுக்குள் ஒழுங்கு படுத்தப்படும்.

2. நேர்முகத் தேர்வுக்கு நான் ஏன் அழைக்கப்படவில்லை?

   பொதுச்சேவைத் துறையின் ஆணையத்தில் பதிந்து நீண்ட நாட்களாயினும் விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாததற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவை:

   அ. வேலைக்குரிய தேர்வு நடைபெறவில்லை காரணம் அமைச்சு மற்றும் துறைகளிடமிருந்து காலியான வேலை இருப்பதாகக் குறிக்கும் அறிக்கைப் பொதுச்சேவை துறை ஆணையத்திற்குக் கிடைக்கப் பெறவில்லை;

   ஆ. விண்ணப்பதாரரின் பாரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை மற்றும் அந்த பாரம் பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் தகவல் வங்கியில் வெற்றிகரமாக சேமிக்கப்படவில்லை;

   இ. விண்ணப்பதாரரின் மனு குறிப்பிட்ட பருவத்திற்குப் பின் காலாவதியாகி இருத்தல் மற்றும் விண்ணப்பதாரர் மனுவை புதுப்பிக்கத்தவறுதல்;

   ஈ. விளம்பரம் செய்யப்பட்ட அல்லது விண்ணப்பம் செய்யும் வேலைக்கு நிர்ணயிக்கப் பட்ட நுழைவுத் தகுதியை விண்ணப்பதாரர் கொண்டிராமல் இருத்தல்; மற்றும்

   உ. ஆணையம் நிர்ணயம் செய்திருக்கும் அடிப்படைத் தணிக்கை மற்றும் மெரிட் தகுதியில் தேறாமலிருத்தல்.

3. நேர்முகத் தேர்வுக்கு நான் செல்லாமல் இருந்தால் என்ன நிகழும்?

   நேர்முகத் தேர்வுக்குச் செல்லாமல் இருக்கும் விண்ணப்பதாரர்கள் கறுப்புப் பட்டியிலில் இணைக்கப்பட மாட்டார்கள்.

4. நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி மற்றும் இடத்தை நான் மாற்ற முடியுமா?

   ஆணையத்தின் அனுமதியுடன் மாற்ற முடியும். சபா மற்றும் சரவாக் மாநிலங்களில் இடம் பெறும் நேர்முகத் தேர்வுகளின் திகதி மற்றும் இடத்தை மாற்றுவதற்கு முன்

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

உடனடியாக அறிவிக்க வேண்டும். ஆணையத்தின் அனுமதியைப் பெறும் விண்ணப்பங்களில் பெயர், அடையாள அட்டை எண், தொலைப்பேசி எண், வேலை விபரம், கொடுக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கான திகதி மற்றும் இடம், நேர்முகத் தேர்வை மாற்ற விரும்பும் திகதி மற்றும் இடம் மற்றும் மாற்றத்தைக் கோருவதற்கான காரணங்கள் ஆகியன இடம் பெற்றிருக்க வேண்டும். மாற்றத்தைக் கோருவதற்கான விண்ணப்பம் எழுத்துப்பூர்வமாகவோ, தொலைநகல் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கீழ்க்காண்பனவற்றுக்கு அனுப்பப்பட வேண்டும்.

5. பொதுச்சேவைத் துறை ஆணையத்தில் வேலைக்கு விண்ணப்பம் செய்தபின் நேர்முகத் தேர்வுக்காக எவ்வளவு காலம் காத்திருக்கவேண்டும்?
இதற்குக் குறிப்பிட்ட கால வரையறை இல்லை காரணம் பதிவு செயல்முறை முடிந்தப் பிறகு அனைத்துத் தகவல்களும் பொதுச்சேவைத்துறை ஆணையத்தின் தகவல் வங்கியில் சேமிக்கப்படும். அமைச்சு மற்றும் துறைகளிலிருந்து பெறப்படும் காலி பணியிடங்களின் அடிப்படையில் பொதுச்சேவைத் துறை ஆணையம் தணிக்கை செயல்முறையினை அமல்படுத்தும். இந்தத் தணிக்கையில் தேறிய விண்ணப்பதாரர் பொதுச்சேவைத் துறை ஆணையத்தால் விண்ணப்பம் செய்த வேலையின் அடிப்படையில் சோதனை / நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்.

6. நான் ஏன் நேர்முகத் தேர்வில் வெற்றிப் பெறவில்லை?
விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்வில் சோபிக்கத் தவறியதால் அதில் தோல்வியடைகிறார். உதாரணமாக, வெளித்தோற்ற அளவில் தயார் நிலையில் இல்லாமை, வேலைக்கான நேர்முகத் தேர்வின் போது அதனைப் பற்றிய விசயஞானம் இல்லாமை, தேவையான கோப்புகளை உடன் கொண்டு வராமை, பொருத்தமற்ற தோற்றம் மற்றும் பிற தகுதிப்பாடுகளும் நேர்முகத் தேர்வாளர்களால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். பொதுச்சேவைத் துறையில் தகுதியான விண்ணப்பதாரரைத் தெரிவு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள நேர்முகத் தேர்வாளர்கள் சம்பந்தப்பட்ட வேலையைப் பற்றிய பரந்த விசயஞானமும் அனுபவமும் உள்ளவர்கள்.

7. நேர்முகத் தேர்வு நடைபெறும்போது ஏன் எனது பெயர் அதில் பட்டியலிடப்படவில்லை?
விண்ணப்பம் செய்த வேலைக்கு பொதுச்சேவைத் துறை ஆணையம் நிர்ணயித்த தற்போதைய அடிப்படைத் தணிக்கையில் தேறாமை மற்றும் விண்ணப்பம் செய்த வேலைக்காக நடத்தபடும் சிறப்புச் சோதனையில் தேறாமை ஆகியன விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாததற்கு முக்கிய காரணங்களாகும். உதாரணமாக, பகுதி மருத்துவத் துறையில் (Separa Perubatan) பணியாற்ற விண்ணப்பதாரர் தேசிய மொழி, ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது தேர்ச்சி நிலையைப் பெற்றிருத்தல் அவசியம். இந்தத் தேர்ச்சியை உடைய தகுதியான மற்றும் திறமையான விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட பயிற்சியினைத் தொடர பொதுச்சேவைத் துறை ஆணையம் முன்னுரிமை வழங்கும்.

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

8. விண்ணப்பதாரர் தாம் முன்னரே செய்த விண்ணப்பத் திகதியின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு முதலில் அழைக்கப்படும் வாய்ப்பு உள்ளதா?நிர்ணயிக்கப்பட்ட கெடு முடிவடையும் முன்னர் அனுப்பப்பட்ட எல்லா விண்ணப்பங்களும் பரிசீலனைச் செய்யப்படும். தணிக்கை மற்றும் தகுதிப்பாடுகளில் தேறிய விண்ணப்பதாரர்கள் யார் முதலில் விண்ணப்பம் செய்தவர் என்ற வரன்முறையின்றி ஆணையத்தால் பரிசீலனைச் செய்யப்படுவார்கள்.

9. நான் ஒரு டிப்ளோமா பட்டதாரி. எஸ்.பி.எம் கல்வித் தகுதியை மட்டுமே கோரும் வேலைக்கான நேர்முகத் தேர்வின் போது எனது டிப்ளோமா சான்றிதழையும் தேர்ச்சி அறிக்கையையும் (transkrip) உடன் கொண்டு வர வேண்டுமா?
நேர்முகத் தேர்வுக்கான வேலை எஸ்.பி.எம் கல்வித் தகுதியை மட்டுமே கோரினாலும், நேர்முகத் தேர்வுக்கு வரும்போது விண்ணப்பதாரர் தனது டிப்ளோமா சான்றிதழையும் தேர்ச்சி அறிக்கையையும் (transkrip) உடன் கொண்டு வர வேண்டும். ஏனெனில், நேர்முகத் தேர்வுக்கான அழைப்பிதழின் அடிப்படையில் விண்ணப்பதாரர் தன்னுடைய அனைத்து கல்வித் தகுதி சான்றிதழ்களையும் உடன் கொண்டு வர வேண்டும்.

பகுதி மருத்துவத் துறையின் (Separa Perubatan) அணுகுமுறை

1. பகுதி மருத்துவத் துறைக்கான (Separa Perubatan) பயிற்சி எத்தனை தவணை நடைபெறும்?
பகுதி மருத்துவத் துறைக்கான பயிற்சி ஓர் ஆண்டில் இரண்டு முறை நடைபெறும். (ஜனவரி மற்றும் ஜூலையில்).
2. பகுதி மருத்துவத் துறைக்கான (Separa Perubatan) பயிற்சி எங்கு வழங்கப்படுகிறது?
மலேசிய சுகாதார அமைச்சின் பயிற்சி மையத்திலும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளிலும் வழங்கப்படுகிறது.

3. பகுதி மருத்துவத் துறைக்கான பயிற்சி (Separa Perubatan) எவ்வளவு காலம் நடைபெறும்?
சான்றிதழ் - 2 ண ஆண்டுகள்
டிப்ளோமா - 3 ஆண்டுகள்

4. நான் பொதுச்சேவைத் துறையில் பணியாற்றும் ஓர் அதிகாரி. நான் பகுதி மருத்துவத் துறைக்கான (Separa Perubatan) பயிற்சிக்கு விண்ணப்பம் செய்ய முடியுமா?

வேலை விண்ணப்ப பாரத்தில் (SPA8i) தற்போது பணிபுரியும் அதிகாரி என குறிப்பிட்டு விண்ணப்பம் செய்ய முடியும். விண்ணபிக்கும் போது விண்ணப்பதாரரின் வயது 38க்கு மேற்போகாமல் இருத்தல் அவசியம்.

அரசாங்கத் துறையில் பணியாற்றி வரும் அதிகாரிகள்/நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்கள் (PSL)

1. எனது விண்ணப்ப மனுவை நான் எவ்வாறு புதுப்பித்துக் கொள்வது?

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

பதிவை வெற்றிகரமாக முடித்து பதிவு அடையாள எண்ணைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களும் மற்றும் அரசாங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களும்/நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்களும் (PSL) தங்களின் விண்ணப்ப பாரத்தில் உள்ள தகவல்களை எப்போது வேண்டுமாயினும் புதுப்பித்துக் கொள்ளலாம். இவற்றைப் புதுப்பிப்பதற்கு நீங்கள் பொதுச்சேவைத் துறை ஆணையத்தை நாட வேண்டியதில்லை.

2. என்னுடைய பதிவை நான் ஏன் புதுப்பிக்க வேண்டும்?
ஒரு வருட காலக்கட்டத்திற்குள் விண்ணப்பதாரர்கள் சோதனை அல்லது நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாவிடினும், அவர்கள் தங்களது அடையாள எண்ணைக் (ID) கொண்டு தங்களின் பதிவைப் புதுப்பிக்க வேண்டும். இதன் மூலம், பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் தகவல் வங்கி நாட்டமுள்ள விண்ணப்பதாரர்களின் தகவல்களை சேமிக்க முடியும். இதன் வழி, விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பம் ஒரு வருடத்திற்குப் பிறகு காலாவதியாகாமல் இருப்பதை உறுதி செய்வதோடு பொதுச்சேவைத்துறை ஆணையம் தங்களின் விண்ணப்பங்களை நேர்முகத் தேர்வுக்காக பரிசீலனை செய்யவும் இயலும். நியமனத்தின் வழி பதவி உயர்வு பெற்றவர்களும் தற்சமயம் அரசாங்கத் துறையில் பணியாற்றுபவர்களும் பொதுச்சேவைத் துறையின் வேலை விண்ணப்பப் பகுதியில் (SPA8i) அடையாள எண்ணை (ID) முன்னதாகப் பெற்றுத் தங்களின் பதிவை சுயமாகப் புதுப்பிக்க வேண்டும்.

3. அரசாங்கத் துறையில் பணியாற்றி வரும் அதிகாரிகள் / நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்கள் (PSL) இணையத்தின் வழி நேரடியாக வேலைக்கு விண்ணப்பிக்க முடியுமா?
அரசாங்கத் துறையில் பணியாற்றும் ஊழியர்களும் நியமனத்தின் வழி பதவி உயர்வு பெருபவர்களும் (PSL), பொதுச்சேவைத் துறை ஆணைய இணையத்தின் வழி நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும். புதிய வேலைக்கு விண்ணப்பம் செய்வதற்கு முன்னதாக,நியமனத்தின் வழி பதவி உயர்வு பெற்றவர்களின் தற்போதைய பணி உறுதி செய்யப் பட்டிருக்க வேண்டும். நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டால், அந்த அதிகாரி தம் பணியிடத் துறைத் தலைவரின் உறுதிக் கடிதத்தை உடன் கொண்டு வர வேண்டும். மேலும், பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் அகப்பக்கத்தில் உள்ள சுருக்கமான பணி விவர பாரத்தை (Lampiran D) பதிவிறக்கம் செய்து அதனையும் தற்போதைய ஆண்டின் தர மதிப்பீடு அறிக்கையையும் உடன் கொண்டு வர வேண்டும்.

4. நியமனம் வழி பதவி உயர்வு பெரும் அதிகாரிகள் அல்லது அரசாங்கத்தில் பணியாற்றும் அதிகாரிகள் பெறும் சிறப்பு சலுகைகள் யாது?
பணியிடம் காலியாகும் பட்சத்தில் நியமனம் வழி பதவி உயர்வு பெற தகுதிகளக் கொண்டிருக்கும் அதிகாரிகள் (நியமனம் வழி பதவி உயர்வு தகுதியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்) அமைச்சு மற்றும் துறையின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கும் நிலையில் நேர்முகத் தேர்வுக்குப் பரிசீலிக்கப்படுவர். அரசாங்கத்தில் பணியாற்றும் அதிகாரிகள் (நியமனம் வழி பதவி உயர்வு பெற்றவர்களைத் தவிர்த்து)

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

அரசாங்கத் துறையில் இன்னும் பணியில் அமராத விண்ணப்பதாரர்களுக்கு நிர்ணயிக்கப்படும் தணிக்கையை விட குறைந்த தணிக்கை அடிப்படையில் பரிசீலிக்கப்படுவார்கள். ஆயினும், நேர்முகத் தேர்வின் போது இம்மூன்று தரப்பினரும் எவ்வித சிறப்பு சலுகைகள் மற்றும் இலகு முறை இல்லாமல் தங்களுக்குள் போட்டியிட வேண்டும். ஏனெனில், நேர்முகத் தேர்வில் தேர்ச்சியடைவோர் மெரிட் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.

5. நியமனம் மூலம் பதவி உயர்வு (Peningkatan Secara Lantikan -PSL) மற்றும் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு (Pegawai Sedang Berkhidmat - PSB) பொது சேவை துறையில் பதவி வகிக்க அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை, உண்மையா?

அமலாக்கப் பிரிவு ஊழியர்கள்/ அதிகாரிகள் அவர்தம் துறையில் மென்மேலும் வெற்றி அடைய அரசாங்க திட்டத்திற்குப் பொது சேவை துறை பெறிதும் துணை புரிகின்றது. 2009-ஆம் ஆண்டில், பொது சேவைத்துறை “MY RECRUITMENT” என்ற முறையின் அடிப்படையில் அரசாங்கஊழியர் சேர்ப்பினை மேற்கொள்ள அரசாங்கம் ஒப்புதல் வழங்கியது. “MYRECRUITMENT” என்ற முறையானது வேலைக்கு மனு செய்பவர்களை,தணிக்கை செய்தல்/ shortlisting, தேர்வு முறை/ Examination, Assessment Centre (AC), மற்றும் நேர்முகத் தேர்வு/Interview என்ற 4 படிநிலைக்கு உட்படுத்தப்படுவர். PSL மற்றும் PSB பதவியிலிருந்து பொது சேவை துறையில் விண்ணப்பம் செய்பவர்களுக்குச் சில விதிமுறைகள் இலகுவாக்கப்பட்டுள்ளது. அதாவது, விண்ணப்பம் செய்யும் PSL மற்றும் PSB ஊழியர்கள் சேவை திட்டத்தின் (skim perkhidmatan) அடிப்படை கீழ் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்குத் தகுதியாக இருப்பின் அவர்களுக்கென தணிக்கை செய்யும்/ shortlisting படிநிலையில் மிக குறைந்தபட்ச அல்லது எவ்வித விதிமுறைகளும் விதிக்கப்படவில்லை. மேலும், PSL ஊழியர்கள் சோதனை படிநிலைக்கு உட்படுத்தப்படாமல் நேராக 3-வது படிநிலையான Assessment Centre (AC)-க்குச் செல்ல வாய்ப்பு இலகுவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில பிரிவுகளில் PSL மற்றும் PSB ஊழியர்களுக்கு எவ்வித விதிவிலக்கும் வழங்கப்படவில்லை மாறாக, மற்ற விண்ணப்பத்தாரர்களைப் போன்று இவர்களும் வாரியத்தால் வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்படுத்திய பிறகே அடுத்த படிநிலைக்கு உட்படுத்தப்படுவர். அதுமட்டுமின்றி நேர்முகத் தேர்வு வாரியமும், PSL மற்றும் PSB ஊழியர்கள்/ அதிகாரிகளின் சேவை காலத்தை மற்றும் அவர்கள் கொண்டுள்ள உயர் தகுதி அடிப்படையில் அவர்களை மேல் மட்ட பதவிகளுக்குச் சேர்க்க பரிசீலனைச் செய்யப்படுகின்றது. பொது சேவைத் துறையானது PSL மற்றும் PSB ஊழியர்களுக்காக 30% ஒதுக்கீட்டு முறையில் செயல்பட்டாலும், நேர் முகத்தேர்வில் வெற்றி பெற்று பதவி வழங்கும் அதிகாரிகளின் எண்ணிக்கை 60% வரை உயர்கின்றது. இவர்களுக்கென்று ஒரு கோட்டா (kuota) வகுக்கவில்லை என்றாலும் பணிக்குச் சேர்ப்பு முறையில் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பத்தாரர்கள் வெற்றி பெற்று இளைஞர் மற்றும் விளையாட்டு பிரிவு அதிகாரி (Pegawai Belia dan Sukan) S41, சுங்கத் துறை அதிகாரி (Pegawai Kastam) W41, மருத்துவப் பிரிவு துணை அதிகாரி (Penolong Pegawai Perubatan) U41, குடிநுழைவுத் துறை அதிகாரி

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]

(Penguasa Imigresen) KP41, அமலாக்கப் பிரிவு அதிகாரி ( Pegawai Penguatkuasa) N41 போன்ற பதவிகளை வகிக்கின்றனர். நேர்முகத் தேர்வின் போது PSL மற்றும் PSB ஊழியர்கள்/ அதிகாரிகள், நேர்முக தேர்வி அதிகாரிகள் முன், தான் அந்த வேலைக்கு மிகவும் பொருத்தமானவர் என்ற நம்பிக்கையினை ஊட்டும் வகையில் சிறந்தவொரு படைப்பினை வழங்கவேண்டும். PSL மற்றும் PSB ஊழியர்கள் பொது சேவையைக் குறித்து அதிகம் தெரிந்து வைத்திருத்தல் அவசியம். மேலும், நேரடியாக (வெளியில் இருந்து) இத்தகைய வேலைகளில் இணையும் அனுபவமற்ற விண்ணப்பத்தாரர்களை விட அவர்களின் தரம் மேலோங்கி இருத்தல் வேண்டும். போட்டித் தளமான பொது சேவைத் துறையில் மிகவும்திறமையான விண்ணப்பத்தாரர்களுக்கே வாய்ப்புப் பிரகாசமாகஇருக்கின்றது. ஆக, பொது சேவையானது பாரபட்சம் பார்ப்பதுகிடையாது; திறமை இருப்பவர்களுக்கு நிச்சயம் வாய்ப்பு உண்டு.நேர்முகத் தேர்வுக்கான சந்திப்பு ஒப்பந்தம் பெரும் அணுகுமுறை.

[ Copyright Reserved : Public Services Commission of Malaysia][Updated Date : 14 November 2017]